# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாப்பு விதிகள்

## அத்தியாயம் I

1.1 குறுந்தலைப்பு:
இதை "ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாப்பு விதிகள்" என எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

1.2 நடைமுறைக்கு வரும் திகதி:
இந்த யாப்பு விதிகள் 2016 வைகாசி மாதம் 08ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு இடப்படும்.

1.3 கட்சியின் பெயர்:
இக் கட்சி "ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி" என பெயர் இடப்படுவதுடன், அப் பெயரைக் கொண்டே அழைக்கப்படுவதுடன், சுருக்கமாக "ஈ.பி.டி.பி" என்றும் அழைக்கப்படுவதுடன் இதன் கீழ் கட்சி என குறித்துரைக்கப்படும்

1.4 கட்சியின் சின்னம்
இது தேர்தல் ஆணையகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளவாறான சின்னமான வீணைச் சின்னமாகும்.

1.5 கட்சியின் இலட்சினை
இது அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ளவாறு அமைந்திருக்கும்.

1.6 கட்சியின் கொடி
இது அட்டவணை IV இல் காட்டப்பட்டுள்ளவாறு அமைந்திருக்கும்.

1.7 கட்சியின் செயலகம்

இக் கட்சியின் மத்திய செயலகம் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும். கட்சியின் மத்திய குழுவின் நிர்வாக அலுவலகம் கொழும்பில் அமைந்திருக்கும்.

## அத்தியாயம் II

1. கட்சியின் நோக்கங்களாவன:

அ. தேர்தல்கள் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இலங்கையில் ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளை வடிவமைத்து நிர்வகித்து முன்கொண்டு செல்லுதல்.

ஆ. இலங்கையின் இறைமையையும், ஆட்புலத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்துப் பேணல்.

இ. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதும், சமத்துவத்தையும், சட்ட உரிமை, சமூக உரிமை, அரசியல் உரிமை, சிறுபான்மையினரின் உரிமையையும் நிலை நிறுத்த வேண்டும் என்ற அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பாடுபடுதலும்.

ஈ. இலங்கையின் அரசியல் தளத்தில் "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்ற கொள்கையை முன் கொண்டு செல்லவும், அதனை அடைந்து கொள்ளக்கூடிய நடைமுறை யதார்த்த வழிமுறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தேவையான அரசியல் மதிநுட்ப சிந்தனைகளை செயற்படுத்தல்.

உ. பொதுவாக இலங்கை முழுவதும் வாழும் மக்களது, குறிப்பாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலும்.

ஊ. ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும், சட்ட ஆட்சி தத்துவங்களுக்கும் மதிப்பளித்து, அவற்றை முன்னிலைப்படுத்தி அவற்றை முன்கொண்டு செல்ல செயற்படுத்தல்.

எ. இலங்கையில் வாழும் பல்வேறு சமூகத்தினர் மத்தியிலும் பரஸ்பர புரிந்துணர்வையும், சமூக இணக்கப்பாட்டையும், இன நல்லிணக்கத்தையும், சகஜ வாழ்வையும் உருவாக்கவும், முன்கொண்டு செல்லவும் பாடுபடுதல்.

# அத்தியாயம் III

## 3. கட்சியின் அங்கத்தவர்கள்

### 3.1 அங்கத்துவத்திற்கான தகைமை:

வேறு எந்த அரசியல் கட்சியிலோ, அல்லது அரசியல் குழுக்களிலோ அங்கத்துவத்தைக் கொண்டிராத 18 வயதை அடைந்த புத்தி சுயாதீனமுடைய எந்த நபரும்

அ. இந்த யாப்பு விதிகளை ஏற்றுக்கொண்டு அதன்படி செயலாற்றுவதற்கும்,

ஆ. இக் கட்சி உப விதிகளையும், ஒழுங்கு விதிகளையும் ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்படுவதற்கும்,

இ. இக் கட்சியின் நோக்கங்களையும், கொள்கைகளையும், செயற்திட்டங்களையும் ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கும்,

ஈ. இக் கட்சியின் அங்கத்தவர்களுக்கான ஒழுக்கநெறி கோவைகளை ஏற்றுக்கொள்வதற்கும், அதன்படி செயற்படுவதற்கும்,

உ. ஜனநாயக மத்தியஸ்துவக் கோட்பாட்டினையும், விமர்சன, சுயவிமர்சன பொறிமுறைகளையும் அங்கீகரித்து பின்பற்றுபவர்களாக செயற்படுவதற்கும்,

உடன்படும் பட்சத்தில் அந் நபர் கட்சியின் அங்கத்துவம் பெறுவதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமையுடையவர் ஆவார்.

### 3.2. அங்கத்துவ வகைகள்

அ. ஆயுட்கால அங்கத்துவம்:

I. கட்சியின் அங்கத்தவர் ஒருவர் ஆயுட்கால அங்கத்துவத்திற்குரிய குறித்துரைக்கப்பட்ட சந்தாக் கட்டணத்தை கட்சியின் தேசிய நிர்வாகச் செயலாளர்/பொருளாளரிடம் செலுத்துவதன் மூலம் அவர் ஆயுட்கால அங்கத்தவராக மாறலாம்.

II. கட்சியின் வளர்ச்சியிலும், கொள்கை பரப்பு நடவடிக்கைகளிலும் மும்முரமாக ஈடுபட்டு செயற்பட்டுவரும் சகல ஸ்தாபன உறுப்பினர்களும் இக் கட்சியின் ஆயுட்கால அங்கத்தவராக உரித்துடையவர்கள்.

ஆ. சாதாரண அங்கத்துவம்:

I. இந்த யாப்பு விதிகளின் கீழ் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய எந்தவொரு நபரும் குறித்துரைக்கப்பட்ட அங்கத்துவ சந்தாக்கட்டணத்துடன் சேர்த்து பூர்த்தி செய்யப்பட்ட தனது விண்ணப்பப்படிவத்தை வட்டாரக் கிளையின் செயலாளர், பிரதேசக் கிளையின் செயலாளர், மாவட்டக் கிளையின் செயலாளர் உறுதிப்படுத்தி, தேசிய அமைப்பாளர்/கொள்கை பரப்புச் செயலாளர்: ஊடாக தேசிய-நிர்வாகச் செயலாளர்/பொருளாளரிடம் சமர்ப்பித்து, அத்தகைய விண்ணப்பம் குறித்துரைக்கப்பட்ட குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அந் நபர் கட்சியின் சாதாரண அங்கத்தவராக பதிவு செய்யப்படுவார். இவ் அங்கத்துவம் வருடா வருடம் புதுப்பிக்கப்பட வேண்டும். மாதாந்தம் கட்சியின் சந்தாப் பணம் 20 ருபாவை செலுத்துகின்றவராகவும் இருப்பார்.

II. முழுநேர/பகுதி நேரக் கட்சி அங்கத்துவம்:

1. முழுநேர/பகுதி உறுப்பினர் என்பவர், சமூகத்தில் அறியப்பட்டவராகவும், நற்பெயரைக் கொண்டவராகவும் இருப்பது அவசியமாகும். கட்சியின் அரசியல் கொள்கைகளையும், நடைமுறைகளையும் பின்பற்றுகின்றவராகவும், கட்சிப் பணிகளில் தன்னை முழுமையாகவோ, பகுதி நேரமாகவோ அர்ப்பணித்துச் செயலாற்றுகின்றவராகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

   பரீட்சார்த்த உறுப்பினராக நியமிக்கப்பட்ட நாளில் இருந்து ஆறு மாதத்திற்கு செயற்பட்ட பின்னர், ஒருவர் முழு நேர/ பகுதி நேர உறுப்பினராக நியமனம் பெறுவார். மாதாந்தம் கட்சியின் சந்தாப் பணம் 20 ருபாவை செலுத்துகின்றவராகவும் இருப்பார்.

3. முழு நேர/ பகுதி நேர கட்சி உறுப்பினர்கள் மாத்திரம் தாம் அங்கம் வகிக்கும், வட்டாரக் கிளையின் அல்லது பிரதேசக் கிளையின் அல்லது மாவட்டக்கிளையின் மற்றும் தேசிய பொதுச் சபையின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், அக்கூட்டங்களில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் விடயங்கள் தொடர்பாக வாக்களிப்பதற்கும் தகுதி உடையவர்களாவர்.

III. ஆதரவு உறுப்பினர்:

1. இவர்கள் கட்சிக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களாகவும், மக்கள் நலன்களில் அக்கறை கொண்டவர்களாகவும், கட்சியின் நற்பெயரை வளர்ப்பதற்கு பங்களிப்பவர்களாகவும் இருப்பர்.

2. ஆதரவு உறுப்பினர் ஒருவர் கட்சியின் முழு நேர அல்லது பகுதி நேர உறுப்பினராவதற்கு மேற்கூறிய வகையில் உறுப்புரிமையைப் பெறும் தகுதியைப்பெற்று தமது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அவ்விண்ணப்பம் குறித்த கட்சியின் கிளைகளினால் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து அவர் முழு நேர அல்லது பகுதி நேர உறுப்பினராக அங்கீகாரம் பெறுவார்.

இ. புலம்பெயர்ந்த அங்கத்தவர்கள்:

கட்சி முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்தி இந் நடவடிக்கைகளுக்கு உதவிகளையும், ஒத்தாசைகளையும், பங்களிப்புக்களையும் வழங்குகின்ற புலம்பெயர்ந்த நிலையில் வாழும் இலங்கையில் தமது பூர்வீகத்தைக் கொண்ட சகலரும் இவ் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. கௌரவ அங்கத்தவர்கள்:

கட்சியின் கொள்கைகளையும் அதன் வேலைத் திட்டங்களையும் ஏற்றுக்கொள்ளும் எந்தவொரு உயர் தொழில் புரியும் அல்லது சமூக உயர் அந்தஸ்த்தை பெற்றுள்ள அல்லது மத ஸ்தாபனங்களின் உயர் நிலையில் கடமையாற்றுவோர் போன்ற இன்னோரன்ன சமூக அரசியல் விடயங்களில் ஆர்வம் காட்டும் எந்தவொரு நபருக்கும் தன்னை ஒரு கௌரவ உறுப்பினராக கட்சியில் இணைத்துக் கொண்டு கட்சி நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்ய முன்வருமாறு கட்சியின் மத்திய குழுவினால் விசேடமாக அழைப்பு விடுக்கப்படுபவர்களை, கட்சியின் கௌரவ உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்வதற்கு கட்சியின் மத்திய குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 அங்கத்துவ சந்தாக் கட்டணம்:

அ. ஆயுட்கால அங்கத்துவத்திற்கான சந்தாக் கட்டணம் 5000 ரூபாய்.

ஆ. சாதாரண அங்கத்துவத்திற்கான வருடாந்த சந்தாக் கட்டணம் 240 ரூபாய்.

இ. புலம்பெயர்ந்த அங்கத்துவத்திற்கான சந்தாக் கட்டணம் US$100.

ஈ. இவ் அங்கத்துவ சந்தாக் கட்டணங்களை மீள்பரிசீலனை செய்யும் அதிகாரம் கட்சியின் மத்திய குழுவுக்குரியதாகும்.

3.4 கட்சி அங்கத்தவர்களின் கடமைகள்:

இக் கட்சியின் ஒவ்வொரு அங்கத்தவரும் தமது ஏனைய கடமைகளுடன் பின்வரும் கடமைகளை கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அ. கட்சியின் தலைமைத்துவத்தின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு, ஏற்றுக்கொண்டு, மதிப்பளித்து செயற்படுவதுடன், கட்சிக்கு பூரண விசுவாசத்தை வெளிப்படுத்தல்

ஆ. கட்சியின் கொள்கைகளையும், செயற்திட்டங்களையும், பகிரங்கமாக பரப்புவதுடன், அதனை பாதுகாத்தல்

இ. கட்சியின் ஒழுக்க நெறிக் கோவையில் கோரப்பட்டுள்ள தராதரங்களுக்கு அமைவாக எப்பொழுதும் செயற்படுதல்

ஈ. கட்சியினால் உருவாக்கப்பட்ட ஏனைய அமைப்புக்களின் கூட்டங்களிலும், நடவடிக்கைகளிலும் தவறாமல் பங்கேற்றல்

உ. கட்சியின் நற்பெயருக்கும் மரியாதைக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் தனது நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக்கொள்வதுடன், அந் நடவடிக்கைகளுக்கு தனியாகவும், கூட்டாகவும் பொறுப்புடையவராக இருத்தல்

ஊ. எந்தவொரு கட்சி அங்கத்தவரும்:

1. தமது ஏதாவதொரு நடவடிக்கையினால் அல்லது நடவடிக்கையின்மையினால் மேலே கூறப்பட்ட அங்கத்துவ கடமைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ செய்யாமல் விடுவதும் அல்லது செய்ய மறுப்பதன் மூலமும் அல்லது

2. மேலே கூறப்பட்ட அங்கத்துவ கடமைகளுக்கு மாறுபாடான வகையில் அல்லது அவற்றிற்கு ஒத்துப்போகாத வகையில், அல்லது பாதகமான வகையில் ஏதாவது ஒரு செயலைச் செய்யும் வேளையில் அல்லது

3. கட்சியின் நற்பெயருக்கும், நலன்களுக்கும், மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அல்லது கட்சி அங்கத்தவர்களின் கூட்டுப்பொறுப்பில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடும் போது,

இத்தகைய நடவடிக்கைகளுக்காக அங்கத்தவர்கள் தவறான நடவடிக்கைகளுக்காக குற்றவாளியாக காணப்படுவதுடன், மத்திய குழுவின் தீர்மானம் ஒன்றினால் அவ் அங்கத்தவர்களின் கட்சி அங்கத்துவம் நீக்கப்படுவதுடன் அவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவார்.

3.5 அங்கத்துவத்தை இழத்தல்:

எந்தவொரு அங்கத்தவரும் எத்தகைய சூழ்நிலையிலும் மேற்கூறிய ஒன்று அதற்கு மேற்பட்ட அடிப்படை பண்புகளை இழந்துவிட்டதாக காணப்படும் பட்சத்தில் அல்லது இந்த யாப்பு விதிகளையும், ஏனைய உப விதிகளையும், ஒழுங்கு விதிகளையும், நோக்கங்களையும், கொள்கைகளையும், செயற்திட்டங்களையும், ஒழுக்கநெறிக் கோவைகளையும் ஏற்றுக்கொள்ள அல்லது அதற்கு அமைவாக செயற்பட தவறும் அல்லது மறுக்கும் பட்சத்தில் மத்திய குழுவின் தீர்மானம் ஒன்றின் மூலம் அவ் அங்கத்தவர் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்படவும், கட்சியில் இருந்து வெளியேற்றப்படும் நிலைக்கும் உள்ளாவார்.

3.6 அங்கத்துவ விதிகள்:

இந்த யாப்பு விதிகளுக்கு அமைவாக கட்சியின் அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய உப விதிகளையும், ஒழுங்கு விதிகளையும் காலத்திற்கு காலம் உருவாக்கும் அதிகாரம் மத்திய குழுவுக்கு உரியது. அத்தகைய உப விதிகளையும், ஒழுங்கு விதிகளையும் உருவாக்கும் காலம் வரை இந்த யாப்பே கட்சி அங்கத்தவர்களின் உப விதிகளாகவும், ஒழுங்கு விதிகளாகவும் கருதப்படல் வேண்டும்.

# அத்தியாயம் IV

4.1 கட்சியின் தீர்மானங்கள்:

அ. மத்திய குழு கட்சியின் சகல தீர்மானங்களையும் மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்டுள்ளதுடன், இக் குழுவினால் ஆக்கப்படும் தீர்மானங்கள் கட்சியின் சகல அங்கத்தவர்களையும் கட்டுப்படுத்துவதாக அமையும்.

ஆ. பொது இணக்கமான வகையில், அல்லது பெரும்பான்மையினரின் தீர்மானமாக, தீர்மானங்களை மேற்கொள்வதற்கான நடைமுறைகளை கடைப்பிடிக்கும் பூரண சுதந்திரம் மத்திய குழுவைச் சாரும்.

# அத்தியாயம் V

5.1 கட்சிக் கிளைகள்:

கட்சி பின்வரும் முறைகளில் வடிவமைக்கப்பட்ட கிளைகளைக் கொண்டதாக அமையும்.

அ. வட்டாரக் குழு (ஒவ்வொரு தேர்தல் வட்டாரத்திற்கும்)

ஆ. உள்ளுராட்சி மன்ற குழு (ஒவ்வொரு உள்ளுராட்சி சபைக்கும்)

இ. மாவட்ட குழு (ஒவ்வொரு மாவட்டத்திற்கும்)

ஈ. சர்வதேச பிராந்தியங்களின் குழுக்கள் ( புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்கள் தாம் வாழும் நாடுகளில் சூழலுக்கு ஏற்ப ஏற்படுத்தும் குழுக்கள்)

5.2 வட்டாரக் குழு:

அ. கட்சியின் அடிப்படை அலகுகளாக அமைவது வட்டாரக் குழுக்களாகும்.

ஆ. ஒவ்வொரு தேர்தல் வட்டாரப் பிரிவுக்கும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்

இ. வட்டாரக் குழுவின் செயலாளர்கள், பிரதேச நிர்வாகச் செயலாளர்களினால் பரிந்துரைக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகச் செயலாளரினால் கட்சியின் மத்திய குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று நியமிக்கப்பட வேண்டும்.. ஒவ்வொரு வட்டாரத்திலும் வதியும் கட்சி அங்கத்தவர்கள் சகலரும் வட்டாரக் குழுவின் பொதுச் சபையாகச் செயற்படுவர்.

ஈ. வட்டார நிர்வாகச் செயலாளரே குறித்த வட்டாரக் குழுவுக்கு தலைவராவார். ஒவ்வொரு வட்டாரக் குழுவிலும் செயலாளர், பொருளாளர் உட்பட 09 பேருக்கு உட்பட்டவர்கள் வட்டாரத்தின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாகச் செயற்படுவார்கள். வட்டாரக் குழுவின் பொதுச் சபையிலிருந்து மேற் கூறிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உ. வட்டாரக் குழுவுக்கான பொதுச் சபையும், நிர்வாகக் குழுவும் அமைக்கப்படும்போது அக்குறிப்பிட்ட வட்டாரத்தில் அமைந்துள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் இக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஊ. ஒவ்வொரு வட்டாரக் குழுவும் குறிப்பிட்ட வட்டாரத்தில் பிரிவில் கட்சியின் கொள்கை பரப்பு நிறுவனங்களாக அமைய வேண்டும்.

5.3. உள்ளூராட்சி மன்ற குழு:

அ. ஒவ்வொரு பிரதேச சபை, நகர சபை அல்லது மாநகர சபை போன்ற உள்ளூராட்சி சபைக்கும் ஒரு உள்ளூராட்சி மன்றக் குழு இருக்கும்.

ஆ. குறித்த உள்ளூராட்சி மன்ற பிரதேசத்தினுள் செயற்படும் வட்டாரக் குழுக்களின் செயலாளர்களும், பொருளாளர்களும் குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்ற குழுவின் பொதுச் சபையின் அங்கத்தவர்களாவர்.

இ. குறித்த உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களாகச் செயற்படும் இக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல மக்கள் பிரதிநிதிகளும் குறித்த உள்ளூராட்சி மன்ற குழுவின் உத்தியோகபூர்வ அங்கத்தவர்களாவர்.

ஈ. மாவட்ட நிர்வாகச் செயலாளரினால் சிபாரிசு செய்யப்பட்டு மத்திய குழுவின் அனுமதியுடன் செயலாளர் நாயகத்தினால் உள்ளூராட்சி மன்றக் குழுவின் தலைவர் நியமிக்கப்பட வேண்டும்.

உ. ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற குழுவும் ஒரு நிர்வாகச் செயலாளர், ஒரு கொள்கை பரப்புச் செயலாளர், ஒரு பொருளாளர் உட்பட மேலும் 15 இற்கு மேற்படாத குழு அங்கத்தவர்களையும் கொண்டிருப்பதுடன், குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்ற பிரதேசத்தின் கட்சியின் கொள்கை பரப்பு நடவடிக்கைகளுக்கு இக் குழு கூட்டுப் பொறுப்புடையதாகும்.

5.4. மாவட்டக் குழு:

அ. மாவட்ட நிர்வாகச் செயலாளரை தலைவராகக் கொண்டு இயங்கும் கட்சியின் மாவட்ட குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட வேண்டும். செயலாளர் நாயகத்தினால் மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்படுவர்.

ஆ. குறிப்பிட்ட மாவட்டத்திற்குள் அமைந்திருக்கும் சகல வட்டாரக் குழுக்களினதும், உள்ளூராட்சி மன்ற குழுக்களினதும் பதவி வழி உத்தியோகத்தர்கள் இம் மாவட்ட குழுவின் பொதுச்சபை அங்கத்தவர்களாவர்.

இ. குறித்த மாவட்டத்திற்குள் செயற்படும் இக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல மக்கள் பிரதிநிதிகளும் அக் குறிப்பிட்ட மாவட்டக் குழுவின் உத்தியோகபூர்வ அங்கத்தவர்களாவர்

ஈ. ஒவ்வொரு மாவட்டக் குழுவுக்கும் ஒரு மாவட்டச் செயலாளர், ஒரு பொருளாளர், ஒரு மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் உட்பட 20 இற்கு மேற்படாத குழு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், குறித்த மாவட்டத்தின் கட்சியின் கொள்கைபரப்பு நடவடிக்கைகளுக்கு மாவட்ட குழுவின் அங்கத்தவர்கள் கூட்டுப் பொறுப்படையவர்களாவர்.

5.4. சர்வதேச பிராந்தியங்களின் குழு:

அ. புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற கட்சி உறுப்பினர்கள் அந்தந்த நாடுகளில் அந் நாட்டின் சூழலுக்கு ஏற்ப கட்சியின் கட்டமைப்புக்களை ஏற்படுத்த மத்திய குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆ. இவ்வாறு அமைக்கப்படும் கட்சிக் குழுக்கள் பற்றிய பூரண விபரங்களை கட்சியின் செயலாளர் நாயகத்துக்கு அறிவிக்க வேண்டும்.

இ. வெளிநாடுகளில் கட்சியின் கொள்கைப் பிரசாரங்கள், கட்சிக்கான நிதி திரட்டல்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக செயலாளர் நாயகத்தின் முன் அனுமதியையும், வழிகாட்டல்களையும் இக் குழுக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.6. கட்சிக் குழுக்களின் கூட்டங்களின், நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை, தீர்மானங்கள்:

அ. தேவைப்படும் போதெல்லாம் காலத்திற்கு காலம் கட்சிக் குழுக்களின் கூட்டங்கள் நடத்தப்படலாம். குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது குழுக்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டு கட்சி நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட வேண்டும்.

ஆ. குழுக்களின் மொத்த அங்கத்துவத்தில் 1/3 அங்கத்தவர்கள் கூட்டத்தில் பிரசன்னமாகவிருப்பது குழுக்களின் கூட்டங்கள் நடைபெறத் தேவையான நிர்ணயிக்கப்பட்ட நபர்களில் குறைந்த எண்ணிக்கையாகும். வருடா வருடம் டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் கட்சிக் குழுக்களின் தேர்தல்கள் இடம்பெற வேண்டும்.

இ. மத்திய குழுவுடன் கலந்துரையாடி விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரம் கட்சிக் குழுக்களின் காலத்தை நீடிப்பதற்கும், அல்லது தேர்தல்களை ஒத்திவைப்பதற்கும் செயலாளர் நாயகம் அதிகாரம் கொண்டுள்ளார்.

ஈ. வருடம் தோறும் கட்சிக் குழுக்களின் தேர்தல்களை நடாத்தி புதிதாக தெரிவு செய்யப்படும் பதவி நிலை உத்தியோகத்தர்களின் விபரங்களை கட்சியின் மத்திய குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பது குறித்த குழுக்களின் பதவி நிலை உத்தியோகத்தர்களின் கடமையாகும்.

உ. கட்சிக் குழுக்களின் தேர்தல்கள் ஜனநாயக முறைகளில் நடத்தப்பட வேண்டும் என்பதுடன், பதவிகளுக்கு தெரிவு செய்யப்படாத அங்கத்தவர்களின் பொறுப்பில் இருக்கும் கட்சிக் குழுக்களுக்கு சொந்தமான ஆவணங்களும் கோவைகளும் சீராமையாகவும், நட்புறவுடனும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட குழுவின் பதவி நிலை உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

# அத்தியாயம் VI

# தேசிய மாநாடு

6.1. தேசிய மாநாட்டில் பங்குபற்றுபவர்கள்:

அ. பின்கூறப்படுபவர்கள் கட்சியின் தேசிய மாநாட்டில் பங்குபற்றுவர்.

1. மாவட்ட பணிமனையினால் விசேடமாக நியமிக்கப்பட்ட பேராளர்கள்.

2. மத்திய குழுவினால் விசேடமாக அழைக்கப்பட்ட ஆயுட்கால உறுப்பினர்கள்.

3. மத்திய குழுவினால் விசேடமாக அழைக்கப்பட்ட புலம்பெயர்ந்த உறுப்பினர்கள்.

4. கட்சியின் மக்கள் பிரதிநிதி அவையின் சகல உறுப்பினர்களும்.

ஆ. மத்திய குழுவின் கட்டளையின் பேரில் பேராளர்களுக்கு 14 நாட்களுக்கு முன்னர் முன்னறிவித்தல் கொடுத்து தேசிய மாநாடானது செயலாளர் நாயகத்தினால் கூட்டப்படல் வேண்டும்.

இ. வருடத்தில் குறைந்தது ஒரு தரமாவது தேசிய மாநாடு கூட்டப்பட வேண்டும். அத்தகைய கூட்டம் வருடாந்த, தேசிய மாநாடு என தெரியப்படுத்தப்பட வேண்டும்.

ஈ. ஏதாவது விஷேட தேவையின் நிமித்தம் தேசிய மாநாடு கூட்டப்படுமிடத்து, அது விசேட தேசிய மாநாடு என வகைப்படுத்தப்படும். அதில் அழைக்கத் தகுதியான பேராளர்களின் தொகையில் மூன்றில் ஒரு தொகையினரைக்குக் குறையாத பேராளர்களை எண்ணிக்கையைக் கொண்டிருக்கவேண்டும்.

உ. வருடாந்த தேசிய மாநாட்டின் நடவடிக்கைகளில் தவிசாளரின் உரை, செயலாளர் நாயகம் தேசிய நிர்வாகச் செயலாளர்/பொருளாளர் ஆகியோரின் அறிக்கைகளும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

ஊ. இரண்டு, வருடாந்த தேசிய மாநாடுகளுக்கிடையிலான காலம் 18 மாதங்களுக்கு மேற்படாத வகையில் அமைய வேண்டும். எனினும் மத்திய குழுவின் விசேட தீர்மானங்களுக்கு அமைய இக் காலப்பகுதி வேறுபடலாம். எனினும் அடுத்த தேசிய மாநாடு நடைபெற்று முடியும் வரை பதவியில் இருக்கும் மத்திய குழு தொடர்ந்து செயற்படுவதற்கும், சகலவிதமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் எவ்வித சட்டரீதியான தடையும் இருக்க மாட்டாது.

எ. கட்சியின் தேசிய மாநாட்டிற்கு தவிசாளர் தலைமை வகிக்க வேண்டும் என்பதுடன், அவர் இல்லாத பட்சத்தில் மத்திய குழுவினால் விசேடமாக நியமிக்கப்பட்ட கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தேசிய மாநாட்டிற்கு தலைமை தாங்க வேண்டும்.

ஏ. தேசிய மாநாட்டில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஏதாவது ஒரு பிரேரணை அல்லது தீர்மானம் முதலில் மத்திய குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கிருந்து அனுமதியைப் பெற்ற பின்னரே செயலாளர் நாயகத்தினால் தேசிய மாநாட்டில் அவை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒ. தேசிய மாநாடு தொடர்பாக மத்திய குழுவினால் அத்தகைய மாநாட்டிற்காக விடுக்கப்படும் அழைப்புக்கள், அதில் பங்குபற்றுபவர்கள், மாநாடு நடைபெறும் இடம், அல்லது மாநாட்டு நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாகவும், தேசிய மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும் எந்தவொரு உறுப்பினரும் எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்த முடியாது.

# அத்தியாயம் VII

அரசியல் பீடம், மக்கள் பிரதிநிதிகள் அவை

7.1. அரசியல் பீடம்:

அ. கட்சியின் அரசியல் பீடம் 3 தொடக்கம் 5 உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும்.

ஆ. அரசியல் பீடம் மேற்கூறியவாறு அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் கட்சியின் மத்திய குழுவுக்கு உரியதாகும்.

இ. தேதான சந்தர்ப்பங்களில் எல்லாம் கட்சியின் அரசியல் பீடம் கூட்டப்பட வேண்டும் என்பதுடன், இக் கூட்டங்களை செயலாளர் நாயகமே கூட்ட வேண்டும். அரசியல் பீடக் கூட்டங்களுக்கு செயலாளர் நாயகம் தலைமை வகிப்பார். செயலாளர் நாயகம் இல்லாத வேளையில், அரசியல் பீடத்தினால் நியமிக்கப்படும் யாராயினும் ஒரு அரசியல் பீட சிரேஷ்ட உறுப்பினர் அரசியல் பீட கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

ஈ. அரசியல் பீடமானது கட்சியின் கொள்கைகளையும், வழிகாட்டல்களையும், வடிவமைப்பதுடன், அத்தகைய கொள்கைகளையும், வழிகாட்டல்களையும் மத்திய குழுவுக்கு சிபாரிசு செய்ய வேண்டும்.

உ. அரசியல் பீடமானது அதன் அங்கத்தவர்களைக் கொண்டு உப குழுக்களை அமைத்து பொது மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும், கலந்தாலோசனைகளையும், கருத்துப் பரிமாற்றமும் மேற்கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய விடயங்கள் தொடர்பான சிபாரிசுகளையும் மத்திய குழுவுக்கு சமர்ப்பிக்கலாம்.

ஊ. ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக புலன்விசாரணை அல்லது விசாரணை நடத்தி அல்லது அதுபற்றி கவனம் செலுத்தி அது தொடர்பாக அரசியல் பீடத்தின் ஆலோசனையை அல்லது அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மத்திய குழு கோரலாம்.

2.2 மக்கள் பிரதிநிதிகள் அவை:

அ. தேர்தலினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்கும் நிறுவனங்களில் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் இம் மக்கள் பிரதிநிதிகள் அவையின் உறுப்பினர்களாக இருப்பர்.

ஆ. இவ் அவையின் உறுப்பினர்கள் சகலரும் மத்திய குழுவின் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டும் அடிபணிந்தும் அதற்கமைய தாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் காலம் முழுவதும் செயற்படுவதாக அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ளவாறான விசுவாசப் பிரமாணம் ஒன்றில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்துமாறு மத்திய குழுவினால் கோரப்பட வேண்டும்.

இ. இவ் அவையின் உறுப்பினர்கள் சகலரும் மேற்கூறிய விசுவாசப் பிரமாணத்தை கௌரவித்து அதற்கமைய செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளதுடன், அவ் அவையின் கூட்டுமொத்தமான தீர்மானங்களுக்கும் அமைவாக செயற்படுவதற்கும் கூட்டுமொத்தமாக பொறுப்புடையோர் ஆவர்.

ஈ. இவ் அவையின் அங்கத்தவர்களின் கூட்டுமொத்தமான நடவடிக்கை தேவைப்படும் குறித்த விடயங்கள் தொடர்பாக அலசி ஆராயும் நோக்கத்துடன் காலத்திற்கு காலம் இவ் அவையின் கூட்டங்களை செயலாளர் நாயகம் கூட்ட வேண்டும்.

உ. மேற்குறித்த விசுவாசப் பிரமாணத்திற்கு முரணான வகையில் அல்லது இவ் அவையின் தீர்மானங்களுக்கு முரணான வகையில் அல்லது மத்திய குழுவின் தீர்மானங்களுக்கு முரணான வகையில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இவ் அவையின் எந்தவொரு உறுப்பினரையும்

அவர் கட்சி பிரதிநிதித்துவப்படுத்தி வகித்துவரும் அவரது மக்கள் பிரதிநிதித்துவ பதவியை இராஜினாமா செய்யுமாறு மத்திய குழுவினால் கோரப்பட வேண்டும்.

ஊ. மத்திய குழுவின் கட்டளைகளுக்கு அல்லது தீர்மானங்களுக்கு அமைவாக செயற்படாத எந்த மக்கள் பிரதிநிதிகள் அவை உறுப்பினரும் கட்சி அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்படுவதற்கும், கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவதற்குமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

# அத்தியாயம் VIII

## 8.1 மத்திய குழு:

அ. மத்திய குழு பின்வரும் பதவி நிலை உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைப்பாகும்

1. தவிசாளர்
2. செயலாளர் நாயகம் -
3. தேசிய நிர்வாகச் செயலாளர்/பொருளாளர்-
4. தேசிய அமைப்பாளர்/ கொள்கை பரப்புச் செயலாளர்.
5. மாவட்ட நிர்வாகச் செயலாளர் - யாழ்ப்பாணம்
6. மாவட்ட நிர்வாகச் செயலாளர் - கிளிநொச்சி
7. மாவட்ட நிர்வாகச் செயலாளர் - வவுனியா
8. மாவட்ட நிர்வாகச் செயலாளர் - மன்னார்
9. மாவட்ட நிர்வாகச் செயலாளர் – முல்லைத்தீவு
10. மாவட்ட நிர்வாகச் செயலாளர் - திருகோணமலை
11. மாவட்ட நிர்வாகச் செயலாளர் - மட்டக்களப்பு
12. மாவட்ட நிர்வாகச் செயலாளர் - அம்பாறை
13. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கான தொடர்பாளர்.
14. புலம்பெயர் அங்கத்தவர்களுக்கான தொடர்பாளர்
15. ஒன்றிணைந்த நிறுவனங்கள்/ வாழ்வாதார மேம்பாட்டு முயற்சி மேலான்மைப் பணிப்பாளர்.
16. ஆறு ஆலோசகர்களான அங்கத்தவர்கள்.

ஆ. I. கட்சியின் தவிசாளரும், செயலாளர் நாயகமும், தேசிய நிர்வாகச் செயலாளர்/ பொருளாளர், தேசிய அமைப்பாளர்/ கொள்கை பரப்பச் செயலாளர் ஆகிய பதவிகளுக்கான அங்கத்தவர்கள் கட்சியின் தேசிய மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களைத் தவிர ஏனைய மத்திய குழு உறுப்பினர்கள் செயலாளர் நாயகத்தின் தீர்மானத்தின் மூலம் கட்சியின் தேசிய மாநாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

II. கட்சியின் தேசிய மாநாடு நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் கட்சியின் மத்திய குழு கூட்டம் கூட்டப்படல் வேண்டும். இக் கூட்டத்தில் கட்சியின் அரசியல் பீடத்திற்கு மத்திய குழுவினால் புதிதாக நியமிக்கப்படவுள்ள 5 உறுப்பினர்களின் பெயர்கள் மத்திய குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இ. இந்த யாப்பின் விதிகளுக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ள முதலாவது மத்திய குழு உறுப்பினர்கள் அடுத்த தேசிய மாநாடு முடிவடையும் வரை பதவி வகிப்பார்கள்.

ஈ. மத்திய குழு கூட்டங்கள் செயலாளர் நாயகத்தின் தலைமையில் இடம்பெற வேண்டும். செயலாளர் நாயகம் இல்லாத சந்தர்ப்பத்தில் தவிசாளர் அல்லது மத்திய குழுவின் மற்றுமொரு மூத்த உறுப்பினர் கூட்டங்களுக்கு தலைமை வகிக்கலாம்.

உ. செயலாளர் நாயகத்தினால் தேவைப்படும் போதெல்லாம் மத்திய குழு கூட்டங்கள் கூட்டப்படலாம்.

8.2 பின்வரும் அதிகாரங்களை உள்ளடக்கிய மத்திய குழுவின் அதிகாரங்கள்:

அ. கட்சிக் கிளை ஒன்றை அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாகம் ஒன்றை உருவாக்க அல்லது கலைத்துவிட அல்லது மீளப்புனரமைக்கும் அதிகாரத்துடன் கட்சியினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு குழுவினையும் இடைநிறுத்தம் செய்யும் அதிகாரம்,

ஆ. தேர்தல் ஆணைக்குழுவின் மூலம் அறிவிக்கப்படும் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை நியமிக்கும் அதிகாரம்,

இ. தேர்தல் ஒன்றுக்காக கட்சி சார்பாக முன்னிலைப் படுத்தப்படும் சகல வேட்பாளர்களும், தேர்தல் ஒன்றில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் சகலரும், தேர்தலின் பின்னர் கட்சியினால் நியமனம் செய்யப்படும் நியமன உறுப்பினர்கள் சகலரும் இவ் யாப்பின் அட்டவணை I இல் காட்டப்பட்டவாறான விசுவாசப் பிரமாணம் ஒன்றில் கையொப்பம் இட்டு உறுதிப்படுத்துமாறு கோரும் அதிகாரம்.

ஈ. கட்சியில் ஏற்படக்கூடிய பதவி வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரத்துடன் தற்காலிக நியமனங்களை வழங்கும் அதிகாரம்,

உ. இந்த யாப்பு விதிகளை பொருள்கோடல் செய்யவும், இந்த யாப்பில் காணப்படும் பிழைகளை அல்லது தவறுகளை திருத்தும் அதிகாரம்,

ஊ. தவிசாளரும், செயலாளர் நாயகமும் தேசிய நிர்வாகச் செயலாளர்/பொருளாளருடன் இணைந்து வங்கிக் கணக்கொன்றை கட்சியின் பெயரில் திறந்து நடைமுறைப்படுத்துவதற்கும். அத்தகைய வங்கிக் கணக்குகளை கொண்டு நடாத்தும் அதிகாரத்தை தவிசாளர் அல்லது செயலாளர் நாயகம் ஆகியோருடன் தேசிய நிர்வாகச் செயலாளர்/பொருளாளர் ஆகியோரைக் கொண்டு நடாத்துவதற்கான அதிகாரம்,

எ. தேவையான அளவு உத்தியோகத்தர்களை நியமிக்கவும், அவர்களுக்குரிய வேதனக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான அதிகாரமும்,

ஏ. கட்சியின் ஒழுக்கநெறிக் கோவை, உப விதிகள், ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்கும் தேவை ஏற்படும் போதெல்லாம் காலத்திற்கு காலம் அவற்றை மீள் வரைவதற்குமான அதிகாரம்,

ஐ. கட்சியின் வழிகாட்டலில் இயங்கும் புதிய நிறுவனங்களையும், அமைப்புக்களையும் உருவாக்குவதற்கும், அவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்குமான அதிகாரத்தையும் கொண்டிருக்கும்.

# அத்தியாயம் IX

.1. தவிசாளர் பதவி:

அ. கட்சியின் தவிசாளர் கட்சியினுடைய மூத்த உறுப்பினராதலுடன், மத்திய குழுவின் தீர்மானங்களுக்கு அமைவாக கட்சியின் கிளைகளின் நடவடிக்கைகளுக்கு அவர் வழிகாட்டுவதுடன், அது தொடர்பாக அவர் மத்திய குழுவுக்கும் பொறுப்புக் கூறவேண்டியவரும் ஆவார்.

ஆ. தேசிய மாநாட்டில் தவிசாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்த யாப்பு விதிகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள முதலாவது தவிசாளர் அடுத்த தேசிய மாநாடு முடியும் வரை பதவியில் இருப்பார்.

இ. இறப்பு, இராஜினாமா அல்லது கட்சியில் இருந்து வெளியேற்றம் காரணமாக தவிசாளர் பதவி வெற்றிடமாகும் பட்சத்தில் கட்சியின் சிரேஷ்ட மத்திய குழு உறுப்பினர் ஒருவர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தவிசாளராக பணியாற்ற வேண்டும் என செயலாளர் நாயகம் நியமிப்பார்.

ஈ. மேற்கூறிய வகையில் தேர்ந்தெடுக்கப்படும் கட்சியின் தவிசாளர் பதவிக்காக நியமிக்கப்படும் மத்திய குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் கட்சியின் அடுத்த வருடாந்த தேசிய மாநாடு முடியும் வரை பணியாற்ற வேண்டும்.

.2. செயலாளர் நாயகம் பதவி:

அ. செயலாளர் நாயகம் கட்சியின் பிரதம நிர்வாகியாவார் என்பதுடன், அவர் மத்திய குழுவுக்கு பொறுப்புக் கூறவேண்டியவரும் ஆவார்.

ஆ. கட்சி தொடர்பாக தேர்தல் ஆணையகத்துடன் மேற்கொள்ளும் சகல தொடர்பாடல்களும் செயலாளர் நாயகத்திற்கு ஊடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும். தோதான சந்தர்ப்பங்களில் செயலாளர் நாயகத்தினால் முன் அனுமதி வழங்கப்பட்ட யாரேனும் ஒரு மத்திய குழு உறுப்பினர் அல்லது அரசியல் பீட உறுப்பினர் செயலாளர் நாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

இ. கட்சியின் சகல தஸ்தாவேஜுக்களும், கூட்டக் குறிப்புப் புத்தகங்களும், சகல கட்சி தொடர்பான ஆவணங்களும், கட்சியின் உத்தியோகபூர்வ முத்திரைகளும் செயலாளர் நாயகத்தின் பொறுப்பிலும், அவரின் உடமையிலும் இருக்க வேண்டும்.

ஈ. கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தல் ஒன்றுக்காக மேற்கொள்ளப்படும் அரசியல் கட்சிகளின் கூட்டணிகள் தொடர்பான ஒப்பந்தங்களில் செயலாளர் நாயகம் அல்லது அவரினால் முன் அனுமதி அளிக்கப்படும் யாரேனும் ஒரு மத்திய குழு அல்லது அரசியல் பீட உறுப்பினர் கட்சி சார்பாக கையொப்பம் இடும் உரிமையைக் கொண்டுள்ளார்.

உ. தேர்தல் ஒன்றுக்காக கட்சியின் சார்பில் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் நியமனப் பத்திரத்தில் செயலாளர் நாயகம் கையொப்பம் இடுவதற்கு இயலாத ஒரு சூழ்நிலையில் செயலாளர் நாயகத்திற்கு பதிலாக அவரினால் எழுத்து மூலம் முன் அனுமதி வழங்கப்படும் யாரேனும் ஒரு மத்திய குழு அல்லது அரசியல் பீட உறுப்பினர் தேர்தல் ஆணையகத்தின் அனுமதியுடன் அந்நியமனப் பத்திரத்தில் கையொப்பம் இடுவதற்கு தகுதி உடையவராவார்.

ஊ. தேசிய மாநாட்டின் மூலம் செயலாளர் நாயகம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்த யாப்பு விதிகளின் கீழ் முதலாவது செயலாளர் நாயகமானவர் அடுத்த தேசிய மாநாடு முடிவடையும் வரை பதவியில் இருப்பார்.

எ. இறப்பு, இராஜினாமா அல்லது கட்சியில் இருந்து வெளியேற்றம் காரணமாக செயலாளர் நாயகம் பதவி வெற்றிடமாகும் பட்சத்தில் மத்திய குழுவினால் தெரிவு செய்யப்படும் யாராயினும் ஒரு சிரேஷ்ட மத்திய குழு உறுப்பினர் அடுத்த தேசிய மாநாடு முடியும் வரை செயலாளர் நாயகமாக பணியாற்ற வேண்டும்.

9.3. கட்சியின் பேச்சாளர்:

அ. செயலாளர் நாயகமே கட்சியின் பேச்சாளர் ஆவார். கட்சியின் மத்திய குழு ஏனைய ஒரு அங்கத்தவர் செயலாளர் நாயகத்தினால் அல்லது மத்திய குழுனால் அங்கீகாரம் அளிக்கப்பட்டால் மாத்திரமே கட்சி சார்பாக கருத்துக்களை வெளிப்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டவர்களாவர்.

ஆ. யாராயினும் ஒரு கட்சி அங்கத்தவர் செயலாளர் நாயகத்தினால் அல்லது மத்திய குழுவினால் மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரம் அளிக்கப்படாமல் கட்சி சார்பாக கருத்துத் தெரிவிப்பது கட்சியின் ஒழுக்கத்தை கடுமையான முறையினால் மீறியதான நடத்தையாக கருதப்படுவதுடன் அதற்காக மத்திய குழுவினால் தோதான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

# அத்தியாயம் X

10. **ஒழுக்காற்று நடவடிக்கைகளும், ஒழுக்காற்று குழுக்களும்:**

10.1 மத்திய குழுவுக்கு ஒரு அங்கத்தவரின் செயல் அல்லது செய்யாமை தொடர்பாக ஏதாவது ஒரு தகவல் அல்லது முறைப்பாடு கிடைக்கப்பெற்று அது மத்திய குழுவின் அபிப்பிராயத்தின்படி:

அ. ஒரு அங்கத்தவரின் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கடமைகளை செய்யாது விட்டதாக அல்லது செய்ய மறுத்துவிட்டதாக அல்லது அத்தகைய செயலானது ஒன்று அல்லாது ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தவரின் கடமைக்கு முரண்பாடானதாக அல்லது இணக்கப்பாடற்றதாக அமையும் பட்சத்திலும்,

ஆ. கட்சியின் நலன்களுக்கும், நற்பெயருக்கும் பாதிப்பை உண்டாக்குவதாக அல்லது அங்கத்தவரின் கூட்டுப்பொறுப்பை பாதிப்பதாக அமையுமிடத்தும், அவருக்கு முறையாக அறிவித்தும், சுய விமர்சனம் செய்ய வாய்ப்பளித்தும், இடை நிறுத்தம் செய்தும் அணுகும் நடைமுறை பின்பற்றப்பட்டு,

இ. அத்தகைய உறுப்பினர் மத்திய குழுவினால் கட்சி அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டு கட்சியில் இருந்து வெளியேற்றப்படும் நிலைக்கு உள்ளாக்கப்படுவார்.

ஈ. இவ் வகையில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளும் போது இயற்கை நீதிக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து செயற்படவேண்டும்.

10.2. மத்திய குழுவானது ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக பின்வரும் முறைகளையும் கையாளலாம்.

அ. மத்திய குழுவானது காலத்திற்கு காலம் ஒழுக்காற்றுக் குழுவை அல்லது குழுக்களை நியமித்து அக் குழுக்களிடம் ஒழக்காற்று விடயங்களை கையளித்து அவற்றின் அறிக்கைகளையும், சிபாரிசுகளையும் கோரலாம்.

ஆ. அவ்வாறு கிடைக்கப்பெறும் அறிக்கைகளையும், ஆலோசனைகளையும், சிபாரிசுகளையும் கொண்டு மத்திய குழுவானது குறித்த அங்கத்தவருக்கு எதிரான தோதான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

10.3 ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக செயலாளர் நாயகத்தின் விசேட அதிகாரம்:

அ. கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் அவர் எத்தகைய பதவியை வகிப்பவராக இருந்தாலும் அவரின் நடவடிக்கைகள் காரணமாக கட்சியின் நற்பெயருக்கும், கட்சியின் நலன்களுக்கும் ஏற்படக் கூடிய பாதகங்களை உடனடியாகத் தவிர்த்துக்கொள்வதற்கு ஏதுவாக, அக் குறிப்பிட்ட கட்சி அங்கத்தவரின்

கட்சி அங்கத்துவத்தை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் இடை நிறுத்தி கட்சியின் சகல பொறுப்புக்களிலிருந்தும் அக் குறிப்பிட்ட அங்கத்தவரை விடுவிக்கத்தக்கதான தீர்மானமொன்றை எடுப்பதற்கு கட்சியின் செயலாளர் நாயகத்திற்கு விசேட அதிகாரம் உண்டு.

ஆ. மேற்கூறிய வகையில் செயலாளர் நாயகம் தனது விசேட அதிகாரத்தை பயன்படுத்தி ஏதேனும் ஒரு கட்சி அங்கத்தவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் அது தொடர்பாக கட்சியின் அரசியல் பீடத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட குறிப்பிட்ட அங்கத்தவருக்கு எதிராக தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக, கட்சியின் அரசியல் பீடமே தீர்மானம் மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

# அத்தியாயம் XI

## 11.1. கட்சியின் நம்பிக்கை பொறுப்பாளர்கள்:

அ. பின்வரும் பதவிகளில் இருப்பவர்கள் அவர்கள் கட்சியின் இப் பதவிகளை வகிக்கின்ற வேளையில், இக் கட்சியின் நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கொள்ளப்பட வேண்டும்.

1. தவிசாளர்
2. செயலாளர் நாயகம்
3. தேசிய நிர்வாகச் செயலாளர்/பொருளாளர்
4. தேசிய அமைப்பாளர்/ கொள்கை பரப்புச் செயலாளர்

ஆ. கட்சிக்காக கொள்வனவு செய்யப்படும் அசையும், அசையா சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் மேற்கூறிய நம்பிக்கை பொறுப்பாளர்களின் பெயர்களில் நிறைவேற்றப்பட வேண்டும்.

இ. மேற்கூறிய பதவிகளை வகிப்பவர்களும், அவர்களுக்குப் பின்னர் அப் பதவிகளுக்கு வருபவர்களும் கட்சியின் சொத்துக்களை அவற்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற வகையில் வைத்திருக்க வேண்டும். இந்த நம்பிக்கைச் சொத்துரிமையானது காலத்திற்கு காலம் கூட்டுமொத்தமாக மேற்படி பதவி வகிப்பவர்களையும், காலத்திற்கு காலம் பதவிகளில் தற்காலிகமாக இருப்பவர்களையும் சென்றடையும்.

ஈ. மத்திய குழுவின் அனுமதியுடன் காலத்திற்கு காலம் கட்சியினுடைய சொத்துக்கள் தொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அச் சொத்துக்களை கையாள்வதற்கு சட்ட ரீதியான அதிகாரம் கட்சியின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களிடம் இருக்கும். மத்திய குழுவினால் அனுமதிக்கப்பட்ட சகலவிதமான சொத்து கைமாற்றங்களும் குறைந்தது இரண்டு நம்பிக்கைப் பொறுப்பாளர்களால் நிறைவேற்றப்பட வேண்டும்.

## 11.2 கட்சியின் அசையும் அசையாச் சொத்துக்கள்:

அ. கட்சிக்காக அசையும், அசையாச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதும், வைத்திருப்பதும், குத்தகைக்குக்கொடுப்பதும் அல்லது வாடகைக்கு, அடகுக்கு அல்லது பொருத்தத்திற்கு வாங்கவும், விற்கவும் அல்லது இந் நடவடிக்கைகளுக்காக கட்சிக்கு சொந்தமான நிதியைப் பயன்படுத்துவதற்கும் கட்சிக்கு சட்டரீதியான உரிமை உண்டு.

ஆ. மத்திய குழுவினால் ஏற்று அங்கீகரிக்கப்படும் தீர்மானம் ஒன்றின் மூலமாக அன்றி, மேற்கூறிய நடவடிக்கைகளுக்காக கட்சியின் நிதி பயன்படுத்தப்பட முடியாது.

இ. எந்தவொரு தனிப்பட்ட அங்கத்தவரும் அவர் கட்சியில் எப் பதவி வகிப்பவராக இருந்தாலும் கட்சியின் சொத்துக்களுக்கு உரிமை கோருவதற்கு எந்த வகையிலும் தகுதியற்றவர் ஆவார்.

# அத்தியாயம் XII

## 12.1. இடைக்கால ஏற்பாடுகள்:

அ. இந்த யாப்பு விதிகளின் அத்தியாயம் V இன் பிரகாரம் அமைக்கப்பட வேண்டிய கட்சியின் கிளை நிறுவனங்கள் மற்றும் அத்தியாயம் VII இன் பிரகாரம் அமைக்கப்பட வேண்டிய கட்சியின் அரசியல் பீடம், அத்தியாயம் VIII இன் பிரகாரம் அமைக்கப்பட வேண்டிய மத்திய குழு ஆகிய அமைப்புக்களை அடுத்த தேசிய மாநாடு நடத்தப்படும்வரை, செயற்படுத்தும் அதிகாரமும், அவ்வமைப்புக்களுக்கு உரிய உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமும் கட்சியின் செயலாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்ட வகையில் இந்த யாப்பின் பிரகாரம் அமைக்கப்பட வேண்டிய கட்சியின் பல்வேறு அமைப்புக்களையும் வடிவமைப்பதற்கும், அவ்வமைப்புக்களை செயற்படுத்துவதற்கு தேவையான செயலணியை அடையாளம் கண்டு தோதான அங்கத்தவர்களை தெரிவு செய்து கொள்வதற்கும் ஏற்றவகையில் அடுத்த தேசிய மாநாடு நடத்தப்படும்வரை செயற்படக் கூடியதாக கட்சியின் மத்திய நிர்வாக அரசியல் பீடம் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்படும்.

இ. மேற்கூறிய வகையில் உருவாக்கப்படும் மத்திய நிர்வாக அரசியல் பீடத்தின் அங்கத்தவர்களாக கட்சியின் செயலாளர் நாயகம், தேசிய நிர்வாகச் செயலாளர்/ பொருளாளர், தேசிய அமைப்பாளர்/ கொள்கை பரப்புச் செயலாளர் ஆகியோர் செயற்படுவார்கள்.

ஈ. மேற்கூறிய வகையில் உருவாக்கப்படும் மத்திய நிர்வாக அரசியல் பீடம் இவ் யாப்பு விதிகளின் கீழ் மத்திய குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும் கொண்டதாக செயற்படும்.

உ. மேற்கூறிய வகையில் உருவாக்கப்படும் மத்திய நிர்வாக அரசியல் பீடம் தற்காலிகமானதும், அடுத்த தேசிய மாநாடு நடாத்தப்படும் வரைக்கும் செயற்பாட்டில் இருக்கும்.

# அத்தியாயம் XIII

## 12.1 யாப்பு திருத்தங்களும் பொருள்கோடலும்:

அ. கட்சியின் யாப்பினைத் திருத்துவதற்கும், புதிய பிரிவுகளைச் சேர்ப்பதற்கும், அகற்றுவதற்கும் அல்லது மாற்றியமைப்பதற்கும் உரிய அதியுயர் அதிகாரம் மத்திய குழுவுக்குரியதாகும் இவ் அதிகாரம் இந்த யாப்பில் காணப்படும் பிழைகளையும் அல்லது விடுபாடுகளையும் திருத்துவதற்கான அதிகாரத்தையும், இந்த யாப்பில் கூறப்படாத விடயங்கள் தொடர்பாக தோதான முடிவுகளை மேற்கொள்வதையும் உள்ளடக்கும்.

ஆ. யாப்பு என்பது இந்த யாப்பில் காணப்படும் விதிகளையும், இந்த யாப்பிற்கு அமைவாக ஆக்கப்படும் சகல உப விதிகளையும், ஒழுங்கு விதிகளையும் உள்ளடக்குவதுடன், மத்திய குழுவினால் இவ் யாப்பிற்குக் கொடுக்கப்படும் பொருள்கோடல்களையும் கட்சியின் ஒழுக்கநெறிக் கோவைகளையும் உள்ளடக்கும்.

## அட்டவணை I

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாப்பின் உறுப்புரை 7 (2.2) (ஆ) இன் கீழான விசுவாசப்பிரமாணம்

............................................................... எனும் முகவரியில் வசிக்கும் இந்து / இஸ்லாம் / பௌத்த / கிரிஸ்தவ சமயத்தவரான ........................................................................ ஆகிய நான் உண்மையாகவும், நேர்மையாகவும் பின்வருமாறு உறுதிப்படுத்தி / சத்தியம் செய்து வெளிப்படுத்தி எனது விசுவாசப்பிரமாணத்தை கட்சியின் மத்திய குழுவுக்கு இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

1. இந்த விசுவாசப் பிரமாணத்தைச் செய்யும் நான் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரு அங்கத்தவராக இருக்கின்றேன்.

2. நான் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாப்பினை நன்றாக அறிந்து, தெரிந்து வைத்துள்ளேன் என்றும், இவ்யாப்பில் கூறப்பட்டுள்ள விதிகளை முழுவதுமாக ஏற்றுக் கொள்வதுடன், இவ்யாப்பு விதிகளுக்கு முற்று முழுதாக கட்டுப்பட்டு செயற்படுவது எனது தலையாய கடமை எனவும் நான் இத்தால் ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

3. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை பிரதிநிதிதுவப்படுத்தி, நான் பெற்றுக்கொண்டுள்ள சகல பதவிகளையும் அல்லது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மூலமாக அரசியல் கட்சிகளினூடாக எனக்கு கிடைத்துள்ள சகல பதவிகளையும், அப்பதவிகளினூடாக எனக்குக் கிடைக்கும் சகல வசதி வாய்ப்புக்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாப்புக்கும், தீர்மானங்களுக்கும், கொள்கைகளுக்கும், செயற்திட்டங்களுக்கும் முரண்படாத வகையில் பயன்படுத்துவேன் என்றும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாப்புக்கும், தலைமைத்துவத்திற்கும், கட்சியின் மத்திய குழுவின் / அரசியல் பீட முடிவுகளுக்கும், தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு, மதிப்பளித்து எப்பொழுதும் செயற்படுவேன் என்றும், நான் இக்கட்சியின் யாப்பிற்கும், கொள்கைகளுக்கும், செயற்திட்டங்களுக்கும், தீர்மானங்களுக்கும் முரண்பாடான வகையில் அல்லது அவற்றை நிராகரிக்கும் வகையில் ஒருபோதும் செயற்படமாட்டேன் என்றும் இத்தால் விளம்பல் செய்து விசுவாசப்பிரமாணம் செய்கின்றேன்.

4. அத்துடன் மேலே கூறிய வகையில் எனது விசுவாசப்பிரமாணத்தை கௌரவித்து அதற்கு அமைவாக எப்பொழுதும் செயற்படுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் என்றும், எனது இந்த விசுவாசப்பிரமாணத்திற்கு முரணான வகையில் நான் ஒரு போதும் செயற்பட மாட்டேன் என்றும் எனது

இந்த விசுவாசப்பிரமாணத்திற்கு முரணான வகையில் செயற்பட எனக்கு அவசியம் அல்லது தேவை ஏற்படும் பட்சத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அல்லது இக் கட்சியின் சிபார்சின் காரணமாக ஏனைய அரசியல் கட்சிகளினூடாக நான் பெற்றுக்கொண்டுள்ள சகல பதவிகளையும் உடனடியாக இராஜினாமாச் செய்து அப்பதவிகளுக்கு இக்கட்சியின் ஏனைய உறுப்பினர்களை நியமிக்கக்கூடிய உரிமையை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு நான் எப்பொழுதும் வழங்குவேன் என்றும், மேலும் இங்கு இந்த விசுவாசப்பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு நான் செயற்படாத பட்சத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து என்னை நீக்குவதற்கும், இக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும், அதன் மத்திய குழுவுக்கும், அதன் செயளாளர் நாயகத்திற்கும் பூரண சட்ட அதிகாரம் இருக்கின்றது என்பதனை நான் முழுமையாக ஏற்றுக் கொள்வதுடன், அத்தகைய சூழ்நிலையில் கட்சியின் அத்தகைய செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்துவதற்கோ அல்லது அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ எனக்கு எதுவித உரிமையும் இல்லை என்பதனையும் இத்தால் வெளிப்படுத்தி விசுவாசப்பிரமாணம் செய்கின்றேன்.

மேலே கூறப்பட்ட விடயங்களை )
வாசித்து விளங்கிக்கொண்ட பின்னர் )
அவை சரியென ஏற்றுக்கொண்டு )
அவற்றை உறுதிப்படுத்தி/சத்தியம் செய்து ) என் முன்னிலையில்
தனது கையொப்பத்தை என் முன்னிலையில் )
...................... திகதியன்று ............... )
வைத்து இட்டார். )

சமாதான நீதவான் /
சத்தியப் பிரமாணத்திற்கான ஆணையாளர்

## அட்டவணை II

### கட்சியின் சின்னம்



## அட்டவணை III

### கட்சியின் இலட்சினை

## அட்டவணை IV

### கட்சியின் கொடி



இந்த யாப்பு விதிகள் 2016 ம் வருடம் வைகாசி மாதம் 7ம் திகதி நடைபெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2016 ம் வருடம் வைகாசி மாதம் 7ம் திகதி முதல், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாப்பு விதிகளாக அங்கீகரிக்கப்பட்டு செயற்பாட்டுக்கு வந்துள்ளதென்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

என்றும் மக்கள் சேவையிலுள்ள

டக்ளஸ் தேவானந்தா பா.உ
செயலாளர் நாயகம்,
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
Dd/NL/STA/ 07.05.2016

டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.,
9/3, புகையிரத நிலைய வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04.